**செய்தி வெளியீடு எண்: 221** **நாள்: 07.03.2019**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் பதிவுத்துறையின் செயல்பாடுகள் குறித்து 7.3.2019 அன்று பதிவுத்துறைத் தலைவர் அலுவலகத்தில் சீராய்வுக் கூட்டம் நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை முதன்மைச் செயலாளர் மற்றும் பதிவுத்துறைத் தலைவர் (முழு கூடுதல் பொறுப்பு), அனைத்து கூடுதல் பதிவுத்துறைத் தலைவர்கள், அனைத்து மண்டல துணைத்தலைவர்கள் மற்றும் பதிவுத்துறைத் தலைவர் அவர்களின் நேர்முக உதவியாளர் (பொது) ஆகியோர் கலந்துகொண்டனர்.

2018–19 நிதியாண்டில் பதிவுத்துறைக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள இலக்கான ரூ.11513 கோடி முழுமையாக அடைவதற்கான முயற்சியில் முழு கவனம் செலுத்த அனைத்து துணைப்பதிவுத்துறைத் தலைவர்களையும் மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டார்.

மேலும் வருவாய் இலக்கினை அடைவதற்காக தினசரி அடிப்படையில் நிலுவை ஆவணங்களை விடுவிக்க நடவடிக்கை மேற்கொள்ளுதல், தணிக்கை இழப்புகளை வசூலித்தல், சரியான ஆவணங்களை தாமதமின்றி பதிவு செய்தல் முதலான யுக்திகளையும் கையாண்டு வருவாய் இலக்கினை அடைந்திட முதன்மைச் செயலாளரால் அறிவுறுத்தப்பட்டது.

ஆவணங்கள் பதிவு நாளன்று திரும்ப வழங்கியுள்ளனரா என்பது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்களால் சீராய்வு செய்யப்பட்டது. சென்னையில் 50% ஆவணங்களும், வேலூரில் 64%மும், தஞ்சையில் 65%மும் மதுரையில் 66% ஆவணங்கள் ஆவணப்பதிவு தினத்தன்றே திரும்ப வழங்கப்பட்டுள்ளது. இதனை 90%க்கு மேல் அதிகரிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது.

மாநிலம் முழுவதும் 19,877 ஆவணங்கள் திரும்ப வழங்கப்படாமல் உள்ளது முதன்மைச் செயலாளர் அவர்களால் சுட்டிக்காட்டப்பட்டது.

மாண்புமிகு அமைச்சர் அவர்களால் நிலுவை ஆவணங்கள் குறித்து சீராய்வு செய்யப்பட்டது. மொத்தமாக 5,953 ஆவணங்கள் நிலுவையில் உள்ளது சுட்டிக்காட்டப்பட்டது. நிலுவை ஆவணங்களில் தன்மை நிர்ணயிக்கும்

பொருட்டு **134** ஆவணங்களும் மதிப்பு நிர்ணயித்திற்காக **586** ஆவணங்களும் வருவாய்த்துறை ஆவணங்கள் சரிபார்க்க சென்னையில் மிக அதிகளவில் **1,060** ஆவணங்களும் நிலுவையில் உள்ளதை சுட்டிக்காட்டி உரிய நடவடிக்கை மேற்கொண்டு நிலுவையைக் குறைக்க பயனுரை வழங்கப்பட்டது.

சீட்டு மற்றும் சங்கம் தொடர்பான பணிகள் குறித்து சீராய்வு மேற்கொள்ளப்பட்டது. சீட்டு மத்தியஸ்த வழக்குகளை விரைந்து முடிக்கவும் மாண்புமிகு அமைச்சர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது.

முதலமைச்சர் தனிப்பிரிவு மனுக்கள் மீது முன்னுரிமை அளித்து விரைவு நடவடிக்கை மேற்கொண்டு உடனுக்குடன் பதிலளிக்க அறிவுறுத்தப்பட்டது.

அனைத்து அலுவலர்களும் சீரிய முறையில் பணியாற்றவும், வருவாய் இலக்கினை அடைந்திடவும் மீள மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டு கூட்டம் இனிதே நிறைவுற்றது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**